அங்கே இருக்கிற பொதுமக்கள் கூறுகிறார்கள். இதிலே ஏதாவது 'டெக்னிகல் டிஃபெக்ட்ஸ்' இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலின் விலையை நாம் 6 ரூபாய்க்கு விற்கிறோம். வெளியிலே இருந்து 8 ரூபாய், 9 ரூபாய்க்கு அது விற்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் இதிலே தவறு நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. சிலபேர் இங்கே விற்கிற பாலை அதிகமாக வாங்கிக் கொண்டுபோய் வெளியிலே விற்றுவிடுகிறார்கள். இன்னொரு பக்கம், மாவட்ட ஒன்றியங்களிலிருந்து பால், சென்னைக்கு சப்ளை செய்யப்படுகிறது. அவர்கள் என்ன விலை கொடுத்து அங்கே வாங்குகிறார்களோ, அதைவிட கொஞ்சம் குறைவாகத்தான் விலையை, சென்னையிலே இருக்கிற ஃபெடரேஷன் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது நீண்ட நாட்களாக இருக்கிறது. இப்போது, அதை மாற்றியமைக்க வேண்டும். சென்னைக்கு பால் சப்ளை செய்வதால், வேலூருக்கோ, அல்லது சேலத்துக்கோ அல்லது கோயம்புத்தூருக்கோ அல்லது தென்னாற்காடு மாவட்டத்திற்கோ நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் இதிலே தயக்கம் காட்டுகிறார்கள். அவர்களுக்குச் சொல்லி இப்போது விலை மாற்றியமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். அது இன்னும் கொஞ்சம் வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காரணம் இங்கே இவர்கள் பால் வாங்குவதற்கு பணத்தை சரியாகக் கொடுப்பதில்லை. சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட பணம் மொத்தமாக மாவட்ட ஒன்றியங்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் இந்த பால் கொள்முதல் விலையை அரசு அங்கே இருக்கிற ஒன்றியங்களுக்கு பரிசீலனை செய்து பின்னர் இன்னும் கொஞ்சம் பால் அதிகமாக வருவதற்கு ஏற்றவகையில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பால் கெட்டுப்போகிறது என்கிற விதத்தில் சொன்னார். அதற்கு நான் உடனடியாக நடவடிக்கை எடுத்து வேண்டியதைச் செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம. சின்னசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

1993 ஏப்ரல் 23]

*திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, மற்றும் 1977–78ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில், கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறை தொடர்பான பத்திகள் மீது, பொது நிறுவனங்கள் குழுவின், முப்பத்தைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றுப்பத்தாவது அறிக்கை.

(2) ந்இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1976–77 மற்றும் 1977–78-ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளின், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழுவின், முப்பத்தைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றுப்பதினொன்றாவது அறிக்கை.

(3) 1977–78, 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகளின் மீது, பொது நிறுவனங்கள் அளித்த முப்பத்தெட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றுப்பன்னிரெண்டாவது அறிக்கை.

(4) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984–85 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், கைத்தறி, கைவினைப்பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த்துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் நூற்றுப்பதிமூன்றாவது அறிக்கை.

(5) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1990–91 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் வேளாண்மைத்துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் நூற்றுப்பதினான்காவது அறிக்கை.

(6) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி.நூல் மற்றும் கதர் துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுநிறுவனங்கள் குழு அளித்த பதின்மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றுப்பதினைந்தாவது அறிக்கை.

முற்பகல் 11-45

(7) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் வேளாண்மைத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்றுப் பதினாறாவது அறிக்கை.

(8) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றிப்பதினேழாவது அறிக்கை.

(9) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984–85 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தொழில் துறை தொடர்பான பத்திகளின் மீது குழுவின் நூற்றிப் பதினெட்டாவது அறிக்கை.

நன்றி, வணக்கம்.

(ஆ) மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1992–93 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 14, 15, 16 மற்றும் 17 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய அவகாசம் இன்மையால் 14, 15 மற்றும் 17-வது அறிக்கைகளின்படியெடுத்த நகல்கள் சட்டமன்றப் பேரவை நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சிடப்பட்டு கிடைக்கப்பெற்றவுடன் உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி டி. சக்குபாய் தேவராஜ், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக.